---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பண்டாரகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பண்டாரகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் மிகை சீராக்கும் போது ரூபா 25,103,623 ஆன ஆண்டிற்குரிய முதலீட்டு வருமானம் குறைக்கப்படாது இருந்ததுடன் இருப்புக்களின் தேறிய அதிகரிப்பு ரூபா 534,579 ஆக இருந்த போதும் அது ரூபா 392,079 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.	பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி காசுப் பாய்ச்சல் கூற்றில் கொண்டு வரப்படாது இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பின் வேறுபாடு சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நியத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் இலக்கம் 3.30 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயற்பாடுகளின் கீழ் நிறுவனம் ஒன்றின் பங்களிப்பான மூலதனப்	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

	பெறுவனவுகள் ரூபா 13,288,864 தொகை காசு உட்பாய்ச்சலாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப் பாய்ச்சலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(இ)	நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் இலக்கம் 6.13 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து ஒன்று பயன்பாட்டிற்காக பெறக்கூடிய சந்தர்ப்பத்தில் இருந்து அதன் பெறுமானத் தேய்வு ஆரம்பிக்க வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 16,518,660 ஆன நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய இலக்கம் எல்ஜீடீ/09/2019 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட மின்சார களஞ்சிய இருப்பு மீதி சரி செய்தலாக ரூபா 132,500 தொகை பிழையாக மின்சாரக் களஞ்சிய இருப்புக் கணக்கில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் மின்சார பொருளின் இறுதி மீதியில் ஏற்பட்ட தவறை சரி செய்வதற்காக நாட்குறிப்புக்கள் 06 இன் மூலம் இந்த சீராக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்குரிய மூலதன செலவின மானியம் ரூபா 35,649,214 ஆக இருக்க வேண்டிய போதும் பணமாகக் கிடைத்த ரூபா 13,288,864 தொகை மாத்திரம் விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் மூலதன செலவின மாணியம் ரூபா 22,360,350 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும்.	மேற்படி
(இ)	மீளாய்வாண்டின் இறுதியில் விரிவான வருமானம் ரூபா 242,993,869 ஆக இருக்க வேண்டிய போதும் விரிவான வருமானக் கூற்றில் ரூபா 220,633,518 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஈ)	மீளாய்வாண்டின் இறுதியில் மூலதன மாணியம் ரூபா 106,993,516 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது	இனங்காணப்படாத மூலதன கணக்கின் மீதியை மூலதன செலவினமாக	மேற்படி

ரூபா 71,344,302 ஆக உரிமை உள்ளடக்கப்பட்டிருந்தது. மூலதனங்கள் மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க திருத்த சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம்	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் இன்றி சுற்றாடலில் கழிவுப் பொருள் அல்லது ஒலியினை விடுவித்தல், வைப்புச் செய்தல் மற்றும் புகைத்தல் போன்ற முடியாதிருந்ததுடன் இவ்வாறான நிறுவனங்களைக் கண்டறிந்து அதற்காக சுற்றாடல் அனுதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய 06 நிறுவனங்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அனுமதிப் பத்திரம் பெறாத நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரத்தைப் பெறுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது .	சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்			
(i)	134(1) ஆம் பிரிவு	கால ரீதியில் சபை அதிகாரப் பிரதேசத்தில் புதிய அபிவிருத்திப் பிரதேசங்களை இனங்கண்டு குறித்துரைத்த பிரகாரம் வர்த்தமாணியில் பிரசுரித்து ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	உள்ளுராட்சி உதவி ஆணையாளருக்கு அங்கீகாரத்திற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	158(அ) ஆம் பிரிவு	நிலுவை ஆதனவரியை அறவிடுதல் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்க வில்லை.	ஆதனவரி செலுத்தாத ஆதனங்களின் சில சொத்துக்களை எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மேற்படி

(இ)	இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	நிதிப்பிரமாணம் 104	2023 ஆம் ஆண்டின் போது நகர மண்டபத்தில் காணப்பட்ட 39 பிளாஸ்டிக் கதிரைகளின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 1645	வாகன சம்பவத் திரட்டுப் புத்தகத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் அறிக்கை சமர்ப்பிக்கின் மாதத்தின் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் 268(அ) பொதுப் படிவத்தின் எழுதப்பட்ட பிரயாணம் தொடர்பான மாதாந்தப் பொழிப்பின் மூலப் பிரதியுடன் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 40 வாகனங்களுக்கு உரியதாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(ஈ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	சபைக்கு சொந்தமான 36 வாகனங்களை எரிபொருள் எரிவுப் பரிசோதனை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	டெக்டர் வண்டிகளின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் போது ஓட்ட மணித்தியால பெறுமதி மாற்றமடைந்தமை நிறுவனத்திற்கு பாதகமானதான நிலைமையை ஏற்படுத்தியது.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2016 பெப்ரவரி 29 ஆந் திகதிய 01/2016 என்ற மேல் மாகாண பிரதம செயலாளரின் சுற்றறிக்கை	சபைக்குரிய வாகனங்கள் நிறுவனத்தின் பெயரில் கையேற்க வேண்டியிருந்த போதிலும் ஒரு கெப் வண்டி சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை.	கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் (இயந்திரம்) அறிவிக்கப்பட்டுள்ளது.	மேற்படி

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 207,344,654 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 78,802,975 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

மக்கள் வங்கியின் கமே கடே கணக்கில் 2024 சனவரி மாதம் முதல் மின்சாரப் பட்டியல் மற்றும் நீர்க்கட்டணப் பட்டியல் செலுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தி குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	13,032,675	13,913,659	13,084,309	1,693,872	6,874,691	7,612,091	6,960,442	1,947,516
ii.	வாடகை	6,012,100	6,529,485	5,870,650	779,987	5,449,210	5,850,913	5,140,183	1,494,322
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	365,000	585,000	585,000	-	183,000	444,000	444,000	-
iv.	ஏனைய வருமானம்	335,000	387,300	387,300	-	264,110	324,915	324,915	-
		19,744,775	21,415,444	19,927,259	2,473,859	12,771,011	14,231,919	12,869,540	3,441,838

2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை ரூபா 1,944,516 ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர்	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

	31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 864,522 அதாவது 44 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	எடுக்கப்படும்.	வேண்டும்.
(ii)	கடந்த ஆண்டுகளின் நிலுவை ஆதனவரி வருமானத்தில் ரூபா 101,674 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரி மீதியாக இருந்ததுடன் ரூபா 129,543 தொகை 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் காணப்பட்டது.	நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**வாடகை**		
(i)	புதிய நவீன சந்தைத் தொகுதியின் இலக்கம் 22 என்ற கடைக்காக அறவிட வேண்டிய கடை வாடகை குறித்துரைத்த பிரகாரம் அறவிடப்படாமையினால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த கடையில் இருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 76,494 ஆகும். குறித்துரைத்த பிரகாரம் கடை வாடகை செலுத்தாமை தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	வழக்கு முடிவடைந்தவுடன் உடன்படிக்கையை நாளது வரையாக்கி வாடகை அறவிடல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டில் சந்தை நிலைய வாடகை வருமானம் சிட்டையிடல் ரூபா 5,089,385 உம் வாடகை சிட்டையிடல் ரூபா 1,440,100 உம் ஆக இருந்ததுடன் அதில் ஆண்டில் முறையே ரூபா 4,975,050 மற்றும் ரூபா 895,600 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வியாபார நிலைய வாடகைப் பெறுமதி ரூபா 114,335 ஆக இருந்ததுடன் வாடகை வருமானம் ரூபா 544,500 நிலுவையாகும்.	2025 மார்ச் 31 இல் உள்ளவாறு வியாபார நிலைய வாடகை நிலுவை மீதி ரூபா 52,000 உம், வாடகை நிலுவை மீதி ரூபா 544,500 உம் ஆகும். வாடகை நிலுவை இலக்கம் 07 என்ற கடைக்கு மாத்திரமே காணப்படுவதுடன் அதற்குரிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**		
	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,302,132 ஆக இருந்ததுடன்	2021 ஆம் ஆண்டில் பாணந்துறை நீதிமன்ற தண்டப்பணமான ரூபா 2,302,132 தொகைக்கு இடையே ரூபா 1,665,119 தொகை 2025.01.16 ஆந் திகதி	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

முத்திரைக் கட்டணத்திற்காக 2024 ஆம் ஆண்டின் போது சிட்டையிடல் மேற்கொள்ளாமல் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக மீளாய்வாண்டின் போது எழுதப்பட்ட பட்டோலையின் அடிப்படையில் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 224,676,144 உம் மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்கப் பெற்ற ரூபா 717,970 தொகையும் மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கிடைத்திருந்ததுடன் ரூபா 637,013 தொகை பட்டோலைகளில் குறைபாடுகளினால் மீண்டும் பட்டோலை தயாரித்து 2025.03.19 ஆந் திகதி மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	வேலைக் கடன் கொடுத்தோர் பட்டோலை மற்றும் வேலை பதிவேடுகளுக்கு இடையே அவதானிக்கப்பட்ட ரூபா 76,887 வேறுபாடை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாட்டுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் வீதி திருத்தங்களுக்காக பெறப்பட்டிருந்த ரூபா 1,351,881 வைப்புக்களுக்குரிய பணிகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என பரீட்சிக்கப்படாமல் ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	வேலைக் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ள 2012 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 66,160,912 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீதியை உறுதிப்படுத்தி தீர்த்து வைக்கப்படாத கடன் மீதிகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 6,614,079 ஆன முற்கொடுப்பனவு மீதியில் ரூபா 4,485,059 தொடர்பாக விரிவான	2020 இற்கு முன்னர் காணப்பட்ட இனங்காண்பதற்கு முடியாது இருந்த மீதியாகக்	தீர்த்து வைக்கப்படாத முற்கொடுப்பனவு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பட்டோலை சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற இந்த முற்பண மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காணப்படுவதுடன் இனங்காண்பதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதும் உபயோக ஆவணங்களைக் கண்டறிவதற்கு முடியாது இருந்தது.	
(உ)	பாணந்துறை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள இலக்கம் 2244 என்ற வழக்கின் பிரகாரம் 2014 நவம்பர் 05 ஆந் திகதி நியாய சபை நியமிக்கப்பட்டிருந்தமையும் சபைக்கு கையளிப்பதற்கு இணங்கி இருந்த நில அளவைக் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு 2024 நவம்பர் 05 ஆந் திகதிய கடிதம் மூலம் வழக்குத் தோற்றியிருந்த சட்டத்தரணி சபைக்கு அறிவித்து இருந்த போதிலும் அந்த நிலத்தை இதுவரை கையேற்பதற்கு சபை நடவடிக்கை எடுக்காது இருந்ததுடன் அதற்காக சட்டத்திரணி கட்டணமாக சபை ரூபா 69,800 செலுத்தி இருந்தது.	சொத்துக்களைக் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள இலக்கம் 92776 என்ற வழக்கிற்கு தோற்றியமைக்காக 05 சந்தர்ப்பங்களின் போது அறவிட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 25,000 தொகை சட்டத்தரணிக்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய உத்தியோகபூர்வ முத்திரை இன்றிய கடிதம் ஒன்றிற்காக 2014 ஆம் ஆண்டின் போது சபையினால் செலுத்தப்பட்டமையால் சபைக்கு ரூபா 25,000 நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த வழக்கிற்கு உரிய எந்த தகவல்களும் சபையிடம் காணப்படவில்லை.	இந்த வழக்குத் தொடர்பாக எந்த ஒரு தகவலும் சபையிடம் காணப்படாது இருந்தமையால் 2024 திசெம்பர் 09 ஆந் திகதி நீதிமன்றத்தில் இறுதி பணிப் பொறுப்புக்கள் மற்றும் 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய முறைப்பாட்டு பிரதி ஒன்று பெறப்பட்டுள்ளது.	வழக்குத் தொடர்பான தகவல்களைக் கண்டறிந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கிரயம் ரூபா 940,140 ஆன நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்து 2023 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட கமேகடே விற்பனை	மீண்டும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	விற்பனை கடையை முறையான வேலைத் திட்டம் ஒன்றின் கீழ் நடாத்திச் செல்வதற்கு

	கடை முறையான வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் நடாத்திச் செல்லாமையினால் தொடர்ச்சியாக நட்டம் பெற்றிருந்தது.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபைக்குரிய கல் உருளை இரண்டு 2017 ஆம் ஆண்டில் இருந்தும், மேலும் ஒரு கல் உருளை 2020 ஆம் ஆண்டில் இருந்ததும், பெக்கோ லோடர் 2021 ஆம் ஆண்டில் இருந்தும் செயலிழந்து காணப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பழுது பார்க்கப்பட்டிருக்கவில்லை.	பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	பழுது பார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	சபைக்கு உரிய கை டெக்டர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்காக இனங்காணப்பட்டு 2023 மே 23 ஆந் திகதி விற்றத் தீர்த்தல் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	02 கை டெக்டர்களை பழுது பார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மோட்டார் சைக்கிளை விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இருப்பு கணக்கில் உள்ளடக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 198,970 பெறுமதியான 28 டோனர் 2025 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் அந்த டோனர் 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது.	நிழற்பட பிரதி இயந்திரம் செயலிழந்த நிலையில் காணப்பட்டமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது இருந்தது.	கொள்வனவுகளின் போது தேவையினை இனங்கண்டு மேற்கொள்ளல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை கூறுகளாக்கப்பட்டு ஏலம் இடப்பட்ட காணிகளில் இருந்து ஒதுக்கப்பட்ட வீதி அளவை	வீதிப் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	சகல வீதிகளையும் உள்ளடக்கி வீதிப் பதிவேடு விரைவாக நாளது வரையாக்கப்படல் வேண்டும்.

	கணிப்பிட்டு வீதிப் பதிவேட்டில் உள்ளடக்காது இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வீதிப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை.		
(ஆ)	2022 ஆம் ஆண்டில் மைத்திரி நகர மண்டபத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 6,927,260 ஆன குசன் கதிரைகள் மற்றும் கேட்போர் கூடக் கதிரைகள் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது நிலையான சொத்துப் பதிவேட்டில் சரியான பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(இ)	உடற்பயிற்சி நிலையத்தில் காணப்பட்ட நிலையான சொத்துக்களில் 66 நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடுவதற்குப் பதிலாக நிலையான சொத்துப் பதிவேட்டில் கிரயம் என்று பதியப்பட்டுள்ளது.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ஈ)	1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலி எல்லை அமைக்க வேண்டியிருந்த போதிலும் சபைக்குரிய எந்த ஒரு மயான நிலத்திற்கும் வேலி எல்லை அமைக்கப்பட்டிருக்கவில்லை.	உரித்தை கையேற்பதற்கு பிரதேச செயலாளரி பண்டாரகம இற்கு அனுப்பப்பட்டுள்ளது. மயான நிலங்களைக் கையேற்ற பின்னர் வேலி நிலங்களை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	உரித்தை கையேற்று காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(உ)	பண்டாரகம பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 25 மயான நிலங்களில் 16 இனது உரித்து உறுதி சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	மயான நிலங்களின் உரிமைத் தன்மையை கையேற்பதற்கு பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டுள்ளதுடன் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரித்தை கையேற்று காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(ஊ)	பிரதேச செயலகம் மூலம் கையளிப்பதற்கு இணங்கி	மயான நிலங்கள் இரண்டினதும் நில வரைபட	நில வரைபட பிரதியைப் பெற்று கையளித்தல்

இருந்த 08 மயான நிலங்களிற்கு இடையே வல்கம மற்றும் பமுணுகம பொது மயான நிலங்கள் 02 இன் அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்து அளவிடல் கட்டணமும் சபையினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நில வரைபடத்தின் பிரதியை பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக கையளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	பிரதியைப் பெற்றுக் கொள்வதற்காக 2024 சனவரி 08 மற்றும் 2024 யூலை 29 மற்றும் 2024 நவம்பர் 26 ஆந் திகதிகளில் கடிதம் மூலம் நில அளவையாளர் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையின் சாரதி பதவியில் உள்ளடக்கப்படாத வேலை களத் தொழிலாளர், சுகாதார தொழிலாளர் மற்றும் இயந்திர தொழிலாளர் பதவிகளின் கடமைகளில் ஈடுபட்டிருக்கின்ற 09 உத்தியோகத்தர்களுக்காக வாகன சாரதி கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தது.	தற்போது நிரந்தர நியமனத்திற்காக ஆட்சேர்த்தல் நிறுத்தப்பட்டுள்ளமையும் ஆட்சேர்ப்பதாயின் ஒரு சாரதி மாத்திரமே ஆட்சேர்ப்பதற்கு முடியுமாக இருந்தமையும் ஆகும்.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணயினரைத் திருத்தி வெற்றிட ஊழியர்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளல் வேண்டும்.
(ஆ)	மரணமடைந்த, சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட 15 ஊழியர்களிடம் இருந்து இடர் கடன், விழா முற்பணம், விசேட முற்பணம் மற்றும் வெள்ளநீர் கடன் பணத்திற்காக அறவிட வேண்டிய கூட்டுமொத்தமாக ரூபா 1,131,159 கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை கடன் மீதி விரைவாக அறவிடப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட 23 நோக்கங்களின் கீழ் செயற்பாடுகள் / செயற்திட்டங்கள் அநேகமானவை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணம் மற்றும் கொள்வனவு செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 13 செயற்பாடுகளுக்கு இடையே ஒரு செயற்பாடு மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த குறிகாட்டிகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல் முன்னேற்றம் அளவிடப்பட்டிருக்கவில்லை.	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காவும் செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்கண்டு அந்த குறிகாட்டிகள் பிரகாரம் செயல் முன்னேற்றம் அளவிடப்பட்டுள்ளது.	இனங்காணப்பட்ட குறிகாட்டிகளின் பிரகாரம் அதற்கு இணங்க சரியாக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகள் அளவிடப்படல் வேண்டும்.
(இ)	உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப் பட்ட 05 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. வீதிகளுக்கு இடையிலான காண் பராமரிப்பின் கீழ் 05 செயற்பாடுகள் காண்பிக்கப்பட்ட போதிலும் 02 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாது இருந்ததுடன் 03 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தது.	பதிவேடுகள் நாளது வரையாக்குதல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகள் உரிய காலத்தில் நிறைவேற்றுதல் வேண்டும்.

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபையின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் 11 விடயங்களின் கீழ் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய பிரிவுகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் மாதம் வரையில் 03 கணக்காய்வு ஐயவினாக்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வுத் துறைகள் தொடர்பில் போதியளவான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	உள்ளகக் கணகாய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையின் 2024 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினம் ரூபா 258,960,987 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செலவினம் ரூபா 183,579,288 அதாவது 71 சதவீதமாக இருந்ததுடன் முரண்கள் 29 சதவீதம் ஆகும்.	ஏற்றுக் கொள்கின்றோம்.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ)	சபையின் மீண்டெழும் செலவின விடயங்கள் 87 இற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 26,877,280 ஆக இருந்ததுடன் அந்த மதிப்பீட்டுத் தொகையில் எந்த ஒரு தொகையும் நடப்பாண்டின் போது செலவிடப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(இ)	மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 29,298,160 ஆன 36 செலவின விடயங்களின் சேமிப்பு 51 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	மேற்படி
(ஈ)	சுய உழைப்பு வருமானங்களில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதன செலவினங்களுக்காக சபையின் 08 செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பதீட்டு நிதியேற்பாட்டு பெறுமதியான ரூபா 3,187,000 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலவிடப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(உ)	சபையின் பாதீடு செய்யப்பட்ட வருமானம் தலைப்பு 08 இற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமான் ரூபா 121,340,000 ஆக இருந்ததுடன் அதில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,771,000 ஆகும். பாதீடு செய்யப்பட்ட வருமானத்தில் சேகரிப்பதற்கு முடியாது இருந்த வருமானத்தின் 76 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.	மேற்படி	மேற்படி
(ஊ)	வருமானத் தலைப்பு 36 இல் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தின் கூட்டுமொத்தம் 94,722,570 ஆக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் கூட்டுமொத்தம் ரூபா 128,593,792 ஆகும். பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விஞ்சி வருமான சேகரித்தலின் முரண்கள் 103 சதவீதம் முதல் 133000 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.	மதிப்பீட்டை விஞ்சி பெறப்பட்ட வருமானத் தலைப்பிற்காக 2024 ஆம் ஆண்டின் போது குறைப்பு பாதீடு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மேற்படி

4.4 சுற்றாடல் பிரச்சினைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 ஆம் ஆண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சபையினால் ரூபா 34,126,914 செலவினம் மேற்கொள்ளப்பட்டதுடன் கழிவுப்	2025 ஆம் ஆண்டுக்கு உரிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறையான திட்டத்தின் பிரகாரம்

	பொருள் விற்பனையில் இருந்து ரூபா 26,850,049 வருமானம் பெறப்பட்டிருந்தது. எனினும் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ஈடுபடுத்த வேண்டிய ஊழியர் எண்ணிக்கை அதற்காக ஈடுபடுத்த வேண்டி இயந்திரப் பொறிமுறை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக கழிவுப் பொருள் முகாமைத்து செயற்பாடுகளுக்கான செலவின மதிப்பீடு தயாரிக்கப்படாது இருந்ததுடன் அதன் மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கள் கையளித்த உத்தியோகத்தர் யார் எனவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.		மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	இலத்திரனியல் கழிவுப் பொருள் சேகரித்தல் முறைமை ஒன்று சபைக்கு அறிமுகப்படுத்தப்படாது இருந்ததுடன் வாராந்த சந்தைக்கு அருகில் இலத்திரனியல் கழிவுப் பொருள் குவித்து வைக்கப்பட்டிருந்தது.	இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் சபையினால் சேகரிக்கப்படாது இருந்ததுடன் இதற்காக தேசிய தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	அனுமதியற்ற வகையில் கழிவுப் பொருள் அகற்றுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு ஐந்து வருட செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குரிய செயற்பாடுகள் நிறைவேற்றுதலின் செயல் முன்னேற்றம் தொடர்பாக குறிப்படப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது.	செயல் நடவடிக்கைத் திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 10 இனை அமுல்படுத்துவதற்காக நீண்ட கால திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான பணிகள் திட்டமிடப்படாது இருந்ததுடன் அதன் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான முறைமையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	நிலைபேறான நோக்கம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நோக்கங்களுக்காக அமுல்படுத்துவதற்குரி நிகழ்சித் திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தனியாக தயாரித்து அதன் செயல் முன்னேறம் காண்பிக்கப்படல் வேண்டும்.